பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை-4

04 12 2021**SATURDAY** 6 45 **AM**

வணக்கம்ஆல் இண்டியாரேடியோ, சென்னை - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஓமிக்ரான் வைரஸ் தொற்றைகட்டுப்படுத்தபல்வேறுநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.

- இந்தவைரஸ் தொற்றுகுறித்துபொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லைஎன்றுஉலகசுகாதாரநிறுவனதலைமைவிஞ்ஞானிதிருமதி. சௌமியாசுவாமிநாதன் கூறியுள்ளார்.

- கோவிட்-19 தடுப்பு மருந்துசெலுத்துவதற்கான 13வது மெகாதடுப்பூசி முகாம் இன்றுமாநிலம் முழுவதும் நடைபெறவுள்ளது.

- கன்னியாகுமரி, திருநெல்வேலிமாவட்டங்களில் இன்றுஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய கனமழைபெய்யக்கூடும் என்றுவானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டிக்குஜெர்மனியும், அர்ஜென்டினாவும் முன்னேறியுள்ளன.

>>>><<<<

ஓமிக்ரான் வைரஸ் தொற்றைகட்டுப்படுத்தபல்வேறுநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகமத்தியசுகாதாரத்துறைஅமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாதெரிவித்துள்ளார்.

மக்களவையில் இந்நோய்த் தொற்றுதொடர்பாககடந்த 2 நாட்களாகநடைபெற்றநீண்டவிவாதத்திற்குபதிலளித்துப் பேசியஅமைச்சர், நாட்டில் இதுவரை 2 பேருக்குமட்டும் ஓமிக்ரான் தொற்று இருப்பதுகண்டறியப்பட்டுள்ளதுஎன்றுகூறினார்.

தென்னாப்பிரிக்காவிலிருந்துபெங்களூருவந்தஒருவருக்கும், அதேநகரில் இருந்தமற்றொருவருக்கும் நோய்த் தொற்றுஉறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுடன் தொடர்பில் இருந்தமற்றவர்களுக்குதொற்றுஏற்படவில்லைஎன்றும் அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 தடுப்பு மருந்துகளை இரண்டுதவணையும் செலுத்திக் கொண்டவர்களுக்குகூடுதலாகமேலும் தடுப்பு மருந்துசெலுத்துவதுகுறித்துநிபுணர் குழு முடிவு செய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்நிலையில், நாடுமுழுவதும் சர்வதேசவிமானநிலையங்களுக்குவந்திறங்கும் பயணிகள் தீவிரமாககண்காணிக்கப்பட்டுவருவதாகவும், ஒமிக்ரான் தொற்றுள்ளநாடுகளிலிருந்துவரும் பயணிகளுக்குபரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மத்தியசுகாதாரத்துறைசெயலர் திரு. ராஜேஷ் பூஷன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஒமிக்ரான் வைரஸ் தொற்றுகுறித்துபொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லைஎன்றுஉலகசுகாதாரநிறுவனதலைமைவிஞ்ஞானிதிருமதி. சௌமியாசுவாமிநாதன் கூறியுள்ளார்.

இந்ததொற்றுவிரைவாகபரவக்கூடியதுஎன்றாலும், தகுந்தமுன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் மூலமாகதடுக்க முடியும் என்றுஅவர் கூறினார்.

உலகம் முழுவதும் தற்போது 99 சதவீதம் டெல்டாவகைகோவிட்-19 மட்டுமேஉள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒமிக்ரான் வைரஸ் தொற்றைஎதிர்கொள்வதற்காககூடுதலாகதடுப்பூசிசெலுத்திக் கொள்ளவேண்டியஅவசியமில்லைஎன்றும், ஏற்கனவே இரண்டுதவணைசெலுத்திக் கொண்டதுபோதுமானதுஎன்றும் திருமதி. சௌமியாசுவாமிநாதன் கூறினார்.

>>>><<<<

ஒமிக்ரான் அச்சுறுத்தல் உள்ளநாடுகளிலிருந்துஎந்தவொருபயணியும் நீலகிரிமாவட்டத்திற்குள் வரவில்லைஎன்றுமாவட்டஆட்சியர் திரு. அம்ரித் தெரிவித்துள்ளார்.

உதகமண்டலத்தில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர், வெளிநாடுகளிலிருந்துகோவைவிமானநிலையத்திற்குவரும் பயணிகள் குறித்ததகவல்கள் பரிமாறப்பட்டு, தீவிரமாககண்காணிக்கப்படுவதாககூறினார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் . .55 . செகண்ட்ஸ்)

>>>><<<<

கோவிட்-19 தடுப்பு மருந்துசெலுத்துவதற்கான 13வது மெகாதடுப்பூசி முகாம் இன்றுமாநிலம் முழுவதும் நடைபெறவுள்ளது.

இதற்காக 50 ஆயிரம் இடங்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்ததடுப்பூசிமுகாம்களில் 2வது தவணைதடுப்பூசிசெலுத்திக் கொள்ளாதவர்களுக்குமுன்னுரிமைஅளிக்கப்படும் என்றுமக்கள் நல்வாழ்வுத்துறைதெரிவித்துள்ளது.

சென்னைமாநகராட்சிக்குஉட்பட்டபகுதிகளில் ஆயிரத்து 600 இடங்களில் தடுப்பூசிசெலுத்தஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தருமபுரியில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசியமாவட்டஆட்சியர் திருமதி. திவ்யதர்சினி, இதுவரைதடுப்பூசிசெலுத்திக் கொள்ளாதவர்கள், தடுப்பூசிசெலுத்திக் கொள்ளமுன்வரவேண்டும் என்றுகேட்டுக் கொண்டுள்ளார்.

(சவுண்ட் பைட் – ஆட்சியர் 35 செகண்ட்ஸ)

>>>><<<<

டெங்குவை கட்டுப்படுத்தமத்தியஅரசுநடவடிக்கைகள் எடுத்துவருவதாகசுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. பாரதிபிரவின் பவார் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்றுகேள்விநேரத்தின்போது இதனைதெரிவித்தஅவர், நடப்பாண்டில் இதுவரைநாடுமுழுவதும் 1 லட்சத்து 64 ஆயிரத்து 103 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாககூறினார்.

>>>><<<<

மாற்றுத்திறனாளிகளுக்குவேலைவாய்ப்பைவழங்கும் வகையில் கரூர் மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாகமின்சாரத் துறைஅமைச்சர் திரு. செந்தில் பாலாஜிதெரிவித்துள்ளார்.

சர்வதேசமாற்றுத் திறனாளிகள் தினத்தைமுன்னிட்டுநேற்றுகரூர் மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் நலத் திட்டஉதவிகளைவழங்கிப் பேசியஅவர், மாற்றுத் திறனாளிகளுக்கானசிறப்பு முகாம்கள் ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்படாமல், மாற்றுத் திறனாளிகள் வசிக்கும் இடங்களுக்கேசென்றுநடத்தப்படுவதாகவும் கூறினார்.

மாற்றுத்திறனாளிகள் வசிப்பதற்குவசதியாக புதியவடிவிலானவீடுகள் கரூர் மாவட்டத்தில் கட்டப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>><<<<

ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் ஆலயத்தில் வரும் 14ஆம் தேதிவைகுண்டஏகாதசிதிருவிழாவைமுன்னிட்டு, விரிவானபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகதிருச்சிமாநகரகாவல்துறைஆணையர் திரு. கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

நேற்று இதற்கானஏற்பாடுகளைஆய்வு செய்தபின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கோவிலின் உட்புறத்தில் 117 கண்காணிப்பு கேமராக்களும், வெளிப்புறத்தில் 90 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளதாககூறினார்.

பக்தர்கள் அனைவரும் கோவிட்-19 வழிகாட்டுநெறிமுறைகளைகடைபிடிக்கவேண்டும் என்றும், விழாவில் எத்தனைபேரைஅனுமதிப்பதுஎன்பதுகுறித்துமாவட்டஆட்சியர் முடிவு செய்வார் என்றும் திரு. கார்த்திகேயன் தெரிவித்தார்.

>>>><<<<

வெப்பச்சலனம் காரணமாக, கன்னியாகுமரி, திருநெல்வேலிமாவட்டங்களில் இன்றுஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய கனமழைபெய்யக்கூடும் என்றுசென்னைவானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய தென் மாவட்டங்கள், மேற்குத்தொடர்ச்சிமலையைஒட்டியுள்ளமாவட்டங்கள் மற்றும் அதனைஒட்டியஉள்மாவட்டங்களில் அனேக இடங்களில் லேசானதுமுதல் மிதமானமழையும், வடகடலோரமாவட்டங்கள், புதுவைமற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானமழையும் பெய்யக்கூடும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கக்கடலில் உருவாகியுள்ள ஜாவத் புயல் காரணமாக, மத்தியமேற்கு வங்கக் கடல் பகுதி, ஆந்திராமற்றும் ஒடிசாகடலோரப் பகுதிகளில் பலத்தகாற்றுவீசக்கூடும் என்பதால் அந்தப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என்றுமீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

ஈரானுடன் அணுஆயுத தடைஉடன்பாடுசெய்துகொள்வதுதொடர்பாகமேற்கத்தியநாடுகளுக்கும், அந்நாட்டிற்கும் இடையேநடைபெற்றபேச்சுவார்த்தைஅடுத்தவாரம் மீண்டும் நடைபெறும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

கோவிட்-19 தொற்றுக்குப் பின்னர், நடப்பு நிதியாண்டின் மூன்றாவதுகாலாண்டில் இந்தியாவின் வர்த்தகம் அதிகரித்துள்ளதாகஐநாவர்த்தகமற்றும் மேம்பாட்டுநிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. ராஜ்குமார் ரஞ்சன் சிங்கை நேற்று புதுதில்லியில் தென்கொரியாவின் தேசியபாதுகாப்பு துணைஆலோசகர் திரு.**Hyoung – Zhin**சந்தித்துப் பேசினார்.

>>>><<<<

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறிநுழைந்துமீன் பிடித்ததாககுஜராத் அருகே, பாகிஸ்தானைச் சேர்ந்த 18 மீனவர்களைகடலோரகாவல்படையினர் நேற்றுகைதுசெய்தனர்.

>>>><<<<

நாடாளுமன்றபொதுக்கணக்குகுழுவின் நூற்றாண்டுகொண்டாட்டத்தை இன்றுகுடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தொடங்கிவைக்கிறார்.

>>>><<<<

நாடுமுழுவதும் இதுவரை 126 கோடியே 45 லட்சத்திற்கும் அதிகமானகோவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.

>>>><<<<

தில்லி இந்திராகாந்திசர்வதேசவிமானநிலையத்திலிருந்துஜெர்மனி புறப்படவிருந்த இந்தியப் பயணிஒருவரிடமிருந்து 4 தோட்டாக்களைமத்தியதொழில் பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>><<<<

திருச்சியில் உணவு பாதுகாப்பு துறையினர் நடத்தியதிடீர் சோதனையில், தடைசெய்யப்பட்ட 423 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில், அனைவருக்கும் வீடுதிட்டத்தில் பயன்பெறவிரும்பும் பயனாளிகள் இம்மாதம் 8ஆம் தேதிவாணியம்பாடியில் நடைபெறவுள்ளதமிழ்நாடுநகர்ப்புற வாழ்விடமேம்பாட்டுவாரியமுகாமில் பங்கேற்குமாறுமாவட்டஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

திருநெல்வேலிரயில்வேசந்திப்பில் தீயணைப்புத் துறைசார்பில் தீதடுப்பு ஒத்திகைநேற்றுநடைபெற்றது.

>>>><<<<

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கனமழையால் சேதமடைந்தபயிர்களை, மாவட்டகண்காணிப்பு அலுவலர் திரு. தர்மேந்திரபிரதான் நேற்றுபார்வையிட்டுஆய்வு செய்தார்.

>>>><<<<

சென்னைசென்ட்ரல் - ஹவுரா கோரமண்டல் அதிவிரைவு ரயில் இன்றுரத்துசெய்யப்பட்டுள்ளதாகதெற்குரயில்வேஅறிவித்துள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டிக்குஜெர்மனியும், அர்ஜென்டினாவும் முன்னேறியுள்ளன.

புவனேஷ்வரில் நேற்றுநடைபெற்றஅரையிறுதியில், ஜெர்மனி 4-2 என்றகோல்கணக்கில் இந்தியாவைவென்றது.

மற்றொருஅரையிறுதியில், அர்ஜென்டினா 3-1 என்றகோல்கணக்கில் ஃபிரான்ஸை வென்றது.

வெண்கலப் பதக்கத்திற்கானபோட்டியில் இந்தியா - ஃபிரான்ஸை எதிர்கொள்ளவுள்ளது.

>>>><<<<

கோவாவில் நடைபெறும் ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் சென்னை - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கு இடையேநேற்றுநடைபெற்றஆட்டம் கோல் எதுவுமின்றிடிராவில் முடிவடைந்தது.

இன்றிரவு நடைபெறும் ஆட்டத்தில் கோவா—ஒருங்கிணைந்தவடகிழக்குஅணியையும், மற்றொருபோட்டியில் பெங்களூரு—மும்பைஅணியையும் எதிர்கொள்கின்றன.

>>>><<<<

பஹ்ரைனில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் மாற்றுத் திறனாளிகளுக்கானபோட்டியில் குண்டுஎறிதலில் இந்தியாவின் அனன்யாபன்சால் வெள்ளிபதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியாவுக்குகிடைத்துள்ளமுதலாவதுபதக்கம் இதுவாகும்.

>>>><<<<